பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

21 09 2026 MONDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று நீலகிரியில் தேயிலை ஆராய்ச்சி அறக்கட்டளையின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்று உரையாற்றுகிறார்.
2. வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு. விஜய், தலைமை செயலகத்தில் இன்று அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.
3. மருத்துவக்கட்டமைப்பில் செவிலியர்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.
4. தவெக அரசு ஆட்சி பொறுப்பேற்று 4 மாதங்கள் ஆகியும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று சட்டப்பேரவை எதிர்கட்சி தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.
5. நீலகிரி, கோவை, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 21 மவாட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

------------

குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

குன்னூரில் உபாசி எனப்படும் தென்னிந்திய தேயிலை தோட்ட உரிமையாளர்கள் சங்க தேயிலை ஆராய்ச்சி அறக்கட்டளையின் நூற்றாண்டு மாநாட்டில் அவர் தலைமை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகிறார்.

தேயிலை தொடர்பான முதன்மையான அறிவியல் ஆராய்ச்சி நிறுவனமான உபாசி 1926-ம் ஆண்டு கூடலூரில் தேயிலை சோதனை நிறுவனமாக அமைக்கப்பட்டது.

குடியரசு துணைத் தலைவர் வருகையை முன்னிட்டு பாதுகாப்பு காரணங்களுக்காக குன்னூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ட்ரோன்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

------------

வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு. விஜய் தலைமை செயலகத்தில் இன்று அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் கடலோர மாவட்டங்கள் மற்றும் காவிரி டெல்டா மாவட்ட ஆட்சி தலைவர்கள் காணொளி வாயிலாக பங்கேற்கிறார்கள்.

வருவாய் துறை, பேரிடர் மேலாண்மை துறை, சுகாதாரத்துறை, மின்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ள வேண்டிய பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே, சென்னையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து, மாநில அமைச்சர்களும், மாநகராட்சி உயர் அதிகாரிகளும் நேற்று பல்வேறு இடங்களில் ஆய்வு செய்தனர்.

------------

மருத்துவக்கட்டமைப்பில் செவிலியர்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாநிலத்தில் கடந்த 12 ஆண்டுகளாக அரசு செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படவில்லை என்றும் தவெக அரசு அளித்த தேர்தல் வாக்குறுதிபடி 7 இடங்களில் செவிலியர் கல்லூரி தொடங்க அரசாணை வெளியடப்பட்டுள்ளதாக கூறினார்.

விரைவில் 896 கிராம சுகாதார செவிலியர்கள் பணி அமர்த்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசு மருத்துவமனைகளில் செவிலியர் பற்றாக்குறையை போக்குவதற்காக 4 ஆயிரத்து 724 செவிலியர்கள் விரைவில் பணி அமர்த்தப்பட உள்ளதாகவும், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 2 ஆயிரத்து 500 செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட உள்ளதாகவும் திரு. அருண்ராஜ் கூறினார்.

------------

தமிழகத்தின் கைவினைக் கலைஞர்களின் தயாரிப்புகளுக்கு உரிய விலை நிர்ணயம் செய்யப்படுவதோடு பன்னாட்டு சந்தை வாய்ப்புகளும்

ஏற்படுத்தித்தரப்படும் என்று மாநில குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. மதன்ராஜா தெரிவித்துள்ளார்.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் கைவினைப்பொருட்கள் மேம்பாட்டு கழகத்தின் விற்பனையகத்தில் தமிழ்நாடு கைவினைப்பொருட்கள் விற்பனையை அதிகரிப்பது குறித்து, நேற்று நேரில் ஆய்வு செய்து செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநிலத்தில் பாரம்பரிய கைவினைப்பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற்றுத்தர மாநில அரசு தொடர்ந்து முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மாநிலம் முழுவதும் உள்ள கைவினை கலைஞர்களுக்கு நவீன வடிவமைப்பு, அவர்களின் தயாரிப்புகளுக்கு உரிய சந்தை வாய்ப்புகளை மாநில அரசு ஏற்படுத்தி தரும் என்றும் அமைச்சர் திரு. மதன்ராஜா தெரிவித்தார்.

------------

தவெக அரசு ஆட்சி பொறுப்பேற்று 4 மாதங்கள் ஆகியும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று சட்டப்பேரவை எதிர்கட்சி தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

மதுராந்தகத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாக கூறினார்.

அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சிலர் ஆளும்கட்சியில் இணைந்ததன் காரணமாக மக்கள் மீது இடைத்தேர்தல் திணிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் பிரச்சாரத்தின் போது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் கடந்தகால திமுக அரசின் மீது பழிபோடும் செயலில் தவெக அரசு ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

------------

தமிழ்நாட்டில் மின்வெட்டை தடுப்பதற்கு மாநில அரசு போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தின் சில பகுதிகளில் 10 மணி நேரம் வரை மின்வெட்டு ஏற்படுவதாக கூறினார்.

குறைந்த செலவில் மின் உற்பத்திக்கு ஏற்பாடுகளை செய்யாமல் வெளிச்சந்தையில் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்படுவதாகவும் திரு. அன்புமணி ராமதாஸ் கூறினார்.

------------

வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக வங்கக்கடலில் உருவாகி உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது மேற்கு மற்றும் மத்திய வங்கக்கடல் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் படிப்படியாக வலுவடையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர்.துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளர் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று இரவு சுமார் அரைமணி நேரம் பலத்த மழை பெய்ததால் வெயிலின் தாக்கம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவியது.

------------

ஹோர்முஸ் நீரிணை பகுதியில் தொடர்ந்து ஈரான் தடைகளை ஏற்படுத்தி வருவதாகவும், இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட வணிக கப்பல்கள் மாற்றுப்பாதையில் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

------------

ரஷ்யாவுடன் மோதல் தொடரும் நிலையில் யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி, நியூயார்கில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்பை சந்தித்து பேச உள்ளதாக கூறியுள்ளார்.

------------

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படத்தாத வகையில் கட்டுமானங்களை மேற்கொள்ள உதவும் புவி மையத்தை பெங்களூருவில் ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு நேற்று திறந்து வைத்தார்.

------------

கற்றாழையை அடிப்படையாக கொண்டு வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் தயாரித்துள்ள நோய் எதிர்ப்பு மாத்திரைக்கு காப்புரிமை கிடைத்துள்ளது.

------------

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே நம்மாண்ட அள்ளி கிராமத்தில் கோழி பண்ணைக்குள் மழை நீர் புகுந்ததால் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கறிக்கோழிகள் நீரில் மூழ்கின.

------------

கனமழை காரணமாக விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே உள்ள ராக்காச்சி அம்மன் கோயில் நீர்வீழ்ச்சியில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து சுற்றுலா பயணிகள் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

------------

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அடையாறு முகத்துவாரத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை மாநகராட்சி துணை ஆணையர் திரு அஃப்தாப் ரசூல் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

------------

சென்னை மாநகர காவல்துறை சார்பில், நகரின் பல்வேறு இடங்களில் பொதுமக்களுக்கு, சைபர் குற்றங்கள் தொடர்பாக தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

------------

சென்னை கோட்டூர்புரம், திருவான்மியூர் பகுதிகளில் தொடர் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வந்த குற்றவாளிகளை கைது செய்துள்ளதாக மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

------------

ஆஸ்திரேலியா ஏ அணிக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏ அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மொஹாலியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா ஏ அணி 46 புள்ளி 3 ஓவரில் 235 ரன்னுக்கு ஆட்டம் இழந்தது.

236 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா ஏ அணி 41 புள்ளி ஒரு ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

Tejal Hasabnis அற்புதமாக விளையாடி 81 ரன்களை குவித்தார்.

அனுஷ்கா சர்மா 55 ரன் எடுத்தார்.

<<<<>>>>